**O.S.No.208/2012**

**Date:09.10.2018**

**வாதி தரப்பு சாட்சி 1 - பரமசிவம், த-பெ.கருத்தான் அம்பலம்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1, 2 முதல் 6, 8, 10 முதல் 18, 25ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கருத்தான் அம்பலம் என் தகப்பனார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி செல்லத்துரை என் அண்ணன் மகன் என்றால் சரிதான். செல்லத்துறையின் மகன்கள் 2, 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவாச் சொத்து மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 2 செண்டு என்றால் சரிதான். தாவாச் சொத்து பூர்வீகத்தில் யாருக்குப் பாத்தியப்பட்டிருந்தது, என்ன பாத்தியத்தில் பாத்தியம் என்று தெரியுமா என்றால் அழகப்பச் செட்டியாருக்குப் பாத்தியப்பட்டிருந்தது. அழகப்பச் செட்டியார் என்பவர் வள்ளியப்பச் செட்டியாரின் மகன் என்றால் சரிதான். தாவாசொத்து வள்ளியப்பச் செட்டியாரால் சையது முகம்மது ராவுத்தர் என்பவரிடமிருந்து 18.08.1941ல் கிரையம் பெறப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. வள்ளியப்பச் செட்டியார் சொந்த விவசாயம் செய்து, அவரால் விவசாயம் செய்ய முடியாமல் போனதால் அந்த காலத்தில் செல்லையா என்பவரை உழவடைதாரராக நியமித்திருந்தார் என்றால் தெரியாது. வள்ளியப்பச் செட்டியாரின் ஒரே மகன் அழகப்பச் செட்டியார் என்றால் சரிதான். அழகப்பச் செட்டியாரிடம் செல்லையா, உழவடை செலுத்தி, ரசீது பெற்று அனுபவித்து வந்துள்ளார் என்றால் தெரியாது. அழகப்பச் செட்டியார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள் இந்த வழக்கில் 3 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 65 வயதாகிறது, என்ன வேலை பார்த்தேன் என்றால் கூலி வேலை பார்த்தேன். என் தகப்பனாரோ, நானோ, வள்ளியப்ப செட்டியார் அல்லது அழகப்பன் செட்டியாரிடம் உழவடைக்கு ஒப்புக் கொண்டதாக ஆவணம் எதுவும் இல்லை என்றால் இல்லை. உண்மையிலேயே உழவடைதாரர் செல்லையா என்றாலும், நான் உழவடைதாரராக இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு செல்லையா உழவடைதாராக இருந்த போது, 1ம் பிரதிவாதி அந்த உழவடையை மேடோவர் வாங்கி, 23.06.1978 முதல் அவர்தான் உழவடை செய்து வந்துள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு விவசாயம் செய்த காலத்தில் அழகப்பச் செட்டியார் மற்றும் மீனாட்சி சுந்தரத்திடம் செல்லத்துரை உழவடைக்கான மகசூல்களை செலுத்தி, ரசீது பெற்றுள்ளார் என்றால் ரசீது கொடுக்க மாட்டார்கள். செல்லையாவின் பெயர்தான் தாசில்தார் அலுவலகத்தில் குத்தகை சாகுபடியாளராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. 11.10.2010ல் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மீனாட்சி சுந்தரம் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். நான் எத்தனை வருடமாக தனிக்குடித்தனமாக இருக்கிறேன் என்றால் திருமணத்திற்குப் பின்னர் தனிக்குடித்தனம் சென்று விட்டேன். திருமணம் எப்போது நடந்தது என்றால்

1974ல் நடந்தது. இந்நிலையில் மற்ற வாரிசுதாரர்களை சேர்ந்து கூட்டாக விவசாயம் செய்ததற்கு எங்களுக்குள் ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதா என்றால் எழுதவில்லை. மகசூலை எவ்வாறு பகிர்ந்து கொண்டோம், உழவடை எவ்வளவு செலுத்தினோம் என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஒவ்வொரு வருடமும் விளைச்சலுக்கு தகுந்த வாறு கொடுப்போம், ஆவணங்கள் எதுவும் இல்லை. 23.6.1978 முதல் 11.10.2010 வரை 1ம் பிரதிவாதிதான் அவர் உடல் உழைப்பை பயன்படுத்தி, தனித்து உழவடை செய்து வந்துள்ளா ' என்றாலும், இதில் நானோ, கருத்தான் அம்பலத்தின் மற்ற வாரிசுகளோ கூட்டு அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. 11.10.2010க்குப் பின்னர் 2, 3 பிரதிவாதிகள் பல நபர்களுக்கு அந்த இடத்தை வீட்டடி மனைகளாக உடைத்து பொது அதிகார ஆவணம் கொடுத்து கிரயமாகிவிட்டது என்றால் சரிதான். தற்போது பூமி வீட்டடி மனைகளாக உள்ளது என்றால் சரியல்ல, நிலமாகத்தான் உள்ளது. நிலமாகத்தான் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் நொண்டிகோவில் பட்டியில்குடியிருக்கிறேன். தாவாச் சொத்து உள்ள இடத்திலிருந்து என் வீடு இரண்டு பர்லாங்கு தூரத்தில் உள்ளதால் தாவாச் சொத்து பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தற்போது 15 வீடுகள் தாவாச் சொத்தில் உள்ளது என்றால் நான்கைந்து வீடுகள் கட்டினார்கள், மறியல் செய்தேன், அதன் பின்னர் நான் தாவாச் சொத்திற்குச் செல்லவில்லை, தற்போது எத்தனை வீடுகள் உள்ளது என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் நானும், 21 முதல் 23 பிரதிவாதிகள் சொத்தை அனுபவம் செய்து வருவதை தடை செய்யாதவாறு நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. மின்கம்பங்கள் ஊன்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலிருந்து வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நகராட்சியிலிருந்து சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குடிதண்ணீர்இணைப்பு நகராட்சியிலிருந்து வீடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை, முழுக்க, முழுக்க தாவாச் சொத்து வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டு, வீடுகள் கட்டி, அவற்றை பல நபர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் முதிர்ச்சியடைந்து விட்டது என்றால் சரியல்ல. பிளாட்டுகளாக விற்றது குறித்து நான் பரிகாரம் எதுவும் கேட்காதால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தற்போது சொத்தின் மதிப்பு அதிகரித்து விட்டதால், 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.